# வெள்ளம் ஏற்பட்ட பின்னர்: விலங்கு மற்றும் பூச்சி தொடர்பான தீங்குகள்

சமூகத் தகவல்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிக்குத் திரும்பி வரும் போது, எலி இன விலங்குகள், பாம்புகள் அல்லது சிலந்திகள் உட்பட காட்டு விலங்குகள் உங்களுடைய வீடு, கொட்டாரம் அல்லது தோட்டத்தில் சிக்குண்டு இருக்கலாம் என்பதை நினைவில் கொள்க.

## பொதுவான உதவிக்குறிப்புகள்

- காட்டு அல்லது அலைந்து திரியும் விலங்குகளைத் தொட வேண்டாம். விலங்குகளை எவ்வாறு கையாளுவது என்ற ஆலோசனைக்கு, உங்களுடைய உள்ளூராட்சிச் சபை, விலங்கு பாதுகாப்பிடம் அல்லது மிருக வைத்தியரைத் தொடர்புகொள்ளுங்கள்.
- எலிகள் மற்றும் சுண்டெலிகள் போன்ற எலி இன விலங்குகளை ஈர்ப்பதைத் தடுப்பதற்காக உணவு அனைத்தையும் தூர விலக்கிச் சேமிக்கவும் (உதாரணமாக, பாதுகாப்பான மூடிகள் உள்ள கொள்கலன்களில் உணவைச் சேமிக்கவும்).
- பாம்புகள் குறித்து விழிப்பாக இருக்கவும்.
- தேங்கி நிற்கும் தண்ணீரில் நுளம்புகள் விரைவாக இனம்பெருக்கி, பெரிய தொந்தரவாக மாறலாம். உங்களுடைய வீட்டைச் சுற்றி நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும்.
- இறந்துவிட்ட செல்லப் பிராணிகளையும் ஏனைய விலங்குகளையும் முடிந்த வரை விரைவில் அகற்றவும். பாதுகாப்பான அப்புறப்படுத்தல் குறித்த ஆலோசனையைப் பெற, உங்களுடைய உள்ளூராட்சிச் சபை அல்லது மிருக வைத்தியருடன் கதையுங்கள்.

## பாம்புகளைக் கையாளுதல்

மற்ற வதிவிடத்தார் போலவே, வெள்ளம் ஏற்படும் போது பாம்புகளும் அவற்றின் உறைவிடத்தை இழந்துவிடலாம். இதன் விளைவாக, அவை வீடுகள், சேமிப்புக் கொட்டாரங்கள் மற்றும் பிற கட்டடங்களுக்கு உள்ளே புகலிடத்தையும் உணவையும் தேடி வரக் கூடும். சேதமான அமைப்புகளிலும் குப்பைகளிலுமே பாம்புகள் கூடுதலாக அடைக்கலமடைகின்றன.

### வெளியிடங்களில் இருக்கும் போது:

- உங்களுடைய கால்களைப் பாதுகாப்பதற்கு வலிமையான கனமான செருப்புகள் மற்றும் கையுறைகள் மற்றும் பாதம் வரை நீண்ட காற்சட்டைகளையும் அணியுங்கள்.
- குப்பைகளை அகற்றும் போது அல்லது சுத்தம் செய்யும் போது, உங்களுடைய கைகளையும் பாதங்களையும் எங்கே வைக்கிறீர்கள் என்பதைக் கவனித்துக்கொள்ளுங்கள்.
- பாம்பைப் பார்த்தால், மெதுவாக பின்னோக்கிக் காலெடுத்து வைத்து, அதன் வழியில் அது தொடர்ந்து செல்ல அனுமதியுங்கள். அதைத் தொட வேண்டாம்.
- உங்களுடைய வீட்டைச் சுற்றியுள்ள குப்பைகளை நடைமுறையில் சாத்தியமான அளவுக்கு விரைவில் அகற்றுங்கள், ஏனென்றால் அவை பாம்புகள் இரையாக உட்கொள்ளும் எலி இன விலங்குகள், பல்லிகள் மற்றும் பூச்சிகளை ஈர்க்கலாம்.
- உயரமான நிலத்தில் ஏற முயற்சிப்பதற்காக பாம்புகள் தண்ணீரில் நீந்திச் செல்லலாம் என்பதை அறிந்து வைத்திருங்கள்.

### உள்ளிடங்களில் இருக்கும் போது:

- உங்களுடைய வீட்டில் பாம்பு இருப்பதைக் கண்டால், பதற்றப்படாதீர்கள்.
- பாம்பை பாதுகாப்பாக எவ்வாறு அகற்றலாம் என்று அறிந்துள்ளவரிடமிருந்து ஆலோசனை கேளுங்கள். பாம்பு பிடிப்பதற்கு அனுமதிப் பத்திரம் பெற்றுள்ள அருகிலுள்ள நபர்களின் பெயர்களைப் பெறுவதற்கு, 136 186 என்ற இலக்கத்தில் சுற்றாடல், நிலம், நீர் மற்றும் திட்டமிடல் திணைக்களத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.

### உங்களைப் பாம்பு கடித்துவிட்டால்:

- பாம்பு கடித்த இடத்தைச் சுற்றியுள்ள சருமத்தைக் கழுவ வேண்டாம்.
- அப்படியே அசைக்காமல் அமைதியாக வைத்துக்கொண்டு, மூன்று பூச்சியத்தை (000) அழைப்பதன் மூலம் துரிதமாக மருத்துவ உதவியைப் பெறுங்கள்.
- உங்களால் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்ல முடியாவிட்டால், முதலுதவியைச் செய்யுங்கள் - பாம்பு கடித்த இடம் உங்களுடைய இதயத்தின் மட்டத்தை விடக் கீழே இருக்குமாறு படுங்கள் அல்லது அமருங்கள். கடித்த இடத்தை சுத்தமான, உலர்ந்த துணியால் அல்லது கட்டுத்துணியால் மூடி, முடிந்தால் அவயவத்தை சிம்பு வைத்துக் கட்டுங்கள்.
- சாத்தியப்பட்டால் கடித்த நேரத்தையும், கட்டுத்துணி வைத்துக் கட்டிய நேரத்தையும் குறித்து வையுங்கள்.
- குருதி வடியாமல் கட்டுப்போட வேண்டாம், நஞ்சை வெளியேற்றுவதற்கென கடித்த இடத்தை வெட்டவோ அல்லது காயத்திலிருந்து நஞ்சை உறிஞ்சியெடுக்கவோ முயற்சி செய்ய வேண்டாம்.

VICTORIA State Government | Health and Human Services

## சிலந்திகள்

### உங்களை சிவப்பு முதுகு (ரெட் பக்) சிலந்தி கடித்துவிட்டால்:

- பாதித்த பகுதியை நன்கு கழுவி, ஐஸ் பைகள் அல்லது சுத்தமான ஐஸ் தண்ணீரால் நோவைத் தணியுங்கள்.
- சிவப்பு முதுகு (ரெட் பக்) சிலந்திக் கடிகளுக்கு அமுக்கத்தைப் பிரயோகிப்பது சிபாரிசு செய்யப்படவில்லை, இது அநேகமாக நோவை அதிகரிக்கிறது.
- உடனடி மருத்துவ உதவியை நாடவும்.

### ஏனைய சிலந்திக் கடிகளுக்கு:

- பகுதியை சவர்க்காரமும் தண்ணீரும் கொண்டு கழுவுங்கள்.
- கடித்த பகுதியில் நோவிருந்தால், ஐஸ் பையைப் பிரயோகியுங்கள்.
- அநேகமான சிலந்திக் கடிகளுக்கு, வேறு முதலுதவி எதுவும் தேவையில்லை.
- அறிகுறிகள் அதிகமானால் அல்லது தொடர்ந்திருந்தால் உங்களுடைய வைத்தியரைத் தொடர்புகொள்ளுங்கள்.

## எலி இன விலங்குகள் வராமல் தடுங்கள்

- எலி இன விலங்குகள் (சுண்டெலிகளும் எலிகளும்) நோய்களைக் காவுகின்றன, தொந்தரவாக இருக்கின்றன.
- எலி இன விலங்குககளுக்கு உறைவிடத்தை அளிக்கக் கூடிய உணவையும் பொருட்களையும் அகற்றுங்கள்.
- உபயோகித்த உடனும் பாத்திரங்களையும், சமையல் உபகரணங்களையும் கழுவுங்கள்.
- கழிவையும் குப்பையையும் சேகரித்து அப்புறப்படுத்தும் முன்னர், மூடியுள்ள குப்பைத் தொட்டிக்குள் அவற்றை இடுவதன் மூலம், முடிந்தவரை விரைவில் அவற்றை இல்லாமல் செய்யுங்கள்.
- சிட்டையிலுள்ள வழிமுறைகளுக்கு இணங்க இரைகள் அல்லது பொறிகளை உலர்வான இடங்களில் வைக்கவும் மற்றும் குழந்தைகளுக்கும் விலங்குகளுக்கும் எட்டாதவாறு வைக்கவும்.

## நுளம்புகளைத் தவிருங்கள்

- விக்ரோரியாவில், சில நுளம்புகளால் ரோஸ் ரிவர் வைரஸ் அல்லது பர்மா ஃபோரெஸ்ற் வைரஸ் போன்ற நோய்கள் காவிச் செல்லப்படலாம், அவை நுளம்புக் கடிகள் ஊடாக மக்களுக்குக் கடத்தப்படக் கூடியவை.
- தண்ணீர் வடிவதாலும் சிறு குட்டைகள் உருவாகுவதாலும் மழையும் வெள்ளப்பெருக்கும் நுளம்பின் எண்ணிக்கைகளை அதிகரிக்கக் கூடும்.

### நுளம்புக் கடிகளைத் தவிர்ப்பதற்குச் செய்ய வேண்டியவை:

- நீண்ட காற்சட்டைகள், சொக்ஸ் மற்றும் நீண்ட கையுள்ள மேற்சட்டைகளை அணியுங்கள் மற்றும் உங்கள் சருமத்தில் N, N-டைஎதைல்-m-தொலுஅமைட் (DEET) அல்லது பிர்காரிடின் உள்ள பூச்சி விரட்டியைப் பாவிக்கவும்.
- விரட்டியின் தயாரிப்புச் சிட்டையிலுள்ள வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்.
- சிறு குழந்தைகள் மீது இந்த பூச்சி விரட்டிகளைப் பூசும் போது கவனமெடுங்கள். குழந்தைகள் தங்களுடைய கண்களை அல்லது வாயைத் தொடலாம் என்பதால் சிறுவர்களின் கைகளின் பகுதிகளில் அவற்றைத் தவிர்க்கவும்.

### உங்களுடைய வீட்டைச் சூழ்ந்துள்ள நுளம்பின் எண்ணிக்கைகளைக் கட்டுப்படுத்த உதவுவதற்கு:

- நடைமுறைக்குச் சாத்தியப்பட்டால், வீட்டுக்கு வெளியில் விடப்பட்டுள்ள பூச்சாடிகள், உபயோகிக்கப்படாத தகரங்கள், ரயர்கள் அல்லது வாளிகள் போன்ற திறந்துள்ள கொள்கலன்களில் உள்ள தண்ணீரை வடிய விடுங்கள்.
- உங்களுடைய செல்லப்பிராணியின் குடிதண்ணீரை ஒழுங்குமுறையில் மாற்றுங்கள்.

## இலையான்கள்

- இலையான்கள் நோய்களைக் காவுகின்றன மற்றும் தொந்தரவளிக்கின்றன.
- உணவும் கழிவும் பெருகினால், அது இலையான்களின் இனப்பெருக்கத் தளமாக மாறுகிறது.
- கழிவையும் குப்பையையும் சேகரித்து அப்புறப்படுத்தும் முன்னர், மூடியுள்ள குப்பைத் தொட்டிக்குள் அவற்றை இடுவதன் மூலம், முடிந்தவரை விரைவில் உணவுக் கழிவைச் சுத்தம் செய்யுங்கள்.

## மேலும் தகவலுக்கு

உங்களுக்கு பாம்பு கடித்துவிட்டால், மூன்று பூச்சியத்தை (000) அழைப்பதன் மூலம் உடனடி மருத்துவக் கவனிப்பைப் பெறுங்கள்.

உங்களை விலங்கு அல்லது பூச்சி கடித்துவிட்டால் அல்லது காயம் ஏற்படுத்திவிட்டால், உங்கள் வைத்தியரிடம் ஆலோசனை பெறுங்கள்.

பாம்பைப் பிடிக்க அனுமதிப் பத்திரம் பெற்றுள்ள நபர்கள் பற்றிய தகவலுக்கு, 136 186 என்ற இலக்கத்தில் Department of Environment, Land, Water and Planning வாடிக்கையாளர் தகவல் மையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.

கடிகள் மற்றும் குத்தல்கள், சிலந்திகள் மற்றும் நுளம்புகள் குறித்த மேலும் தகவலுக்கு, பின்வரும் இணையத்தளத்தில் Better Health Channel-க்குச் செல்க:

www.betterhealth.vic.gov.au

அங்கீகரித்து, வெளியிட்டவர்: விக்ரோரிய அரசாங்கம், 1 Treasury Place, Melbourne.
© விக்ரோரிய மாநிலம், Department of Health and Human Services, ∴பெப்ரவரி 2016.